# பேச்சுவார்த்தைக்கு அரசு நெருங்கிவந்துள்ளது

(லண்டன்)

இலங்கை அரசு விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை ஒன்றை மேற்கொள்ளும் முயற்சியில் மிகவும் நெருக்கமாக வந்துள்ளது.

இவ்வாறு கொழும்பில் அரசியல் அவதானிகள் ஏஜென்சி செய்திகளிடம் தெரிவித்துள்ளனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 38 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 11 இதழ்: 258
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 28-10-1991

## இலங்கை நிலைமை பற்றி லண்டனில் விவரணப் படம்

(லண்டன்)

இலங்கையில் நடைபெற்ற மனிதக்கொலைகள் பற்றி பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய நாட்டு மக்களுக்கு எடுத்து விளக்கும் வகையில் 'உடைந்த முத்து' என்ற தலைப்பிலான விவரணபடமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. சுமார் 25

(4-ம் பக்கம் பார்க்க)

## வடபகுதியில் தொடர்ந்து இராணுவம் குவிப்பு

(கொழும்பு)

வடபகுதியில் தொடர்ந்து இராணுவம் குவிக்கப்பட்டு வருவதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே வடபகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரின் நிலைகளைப் பலப்படுத்தும் நோக்குடனேயே

(4-ம் பக்கம் பார்க்க)

# பொலநறுவ மாவட்டத்தில் புலிகளின் அதிரடி தாக்குதலில் 14 இராணுவத்தினர் உயிரிழப்பு

## ஐந்து சிப்பாய்களைக் காணவில்லை

(பொலநறுவ)

பொலநறுவ மாவட்டத்திலுள்ள வெலிகந்த என்னுமிடத்தில் நேற்று விடுதலைப்புலிகள் நடத்திய திடீர் அதிரடித் தாக்குதலில் பதினான்கு படையினர் பலியானார்கள். மூவர் படுகாயமடைந்தனர். ஐந்து சிப்பாய்கள் காணாமல் போய்விட்டார்கள் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இப்பகுதியில் ரோந்து வந்த இராணுவ அணியொன்றை இடைமறித்து விடுதலைப்புலிகள் கடும் தாக்குதலைத் தொடுத்தனர். புலிகளின் தாக்குதலையடுத்து படையினர் நாலாபுறமும் சிதறி ஓடினார்கள். படையினர் தரப்பில் இறந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகமாக இருக்கலாமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

## லலித் குழுவினரின் எதிர்காலம்?

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி தலைமையிலான அதிருப்தியாளர் குழுவினர் புதியகட்சி எதையும் ஆரம்பிக்கும் நிலையில் இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் ஐ. தே. க.வில் மீண்டும் சேர்ந்து கொள்வார்கள் அல்லது ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியில் தங்களை இணைத்து கொள்வார்கள் என்று சம்பந்தப்பட்ட வட்டா

(4-ம் பக்கம் பார்க்க)

## சர்வகட்சி தெரிவுக்குழு இயங்க முடியாத நிலை!

(கொழும்பு)

இனப்பிரச்னைக்கு தீர்வு காண நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற சர்வகட்சித் தெரிவுக் குழு இயங்க முடியாத நிலையில்

(4ம் பக்கம் பார்க்க)

## "இலங்கை அரசு——— இந்தியப் படையினருக்கு மரியாதை செலுத்தவேண்டும்

(கொழும்பு)

இலங்கையில் விடுதலைப் புலிகளுடனான போரில் கொல்லப்பட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட இந்திய அமைதிப் படையினருக்கு, இலங்கை அரசு மரியாதை செலுத்த வேண்டும் என்று இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவர் திரு. என். என். ஜா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் ஒருமைப்பாட்டைக் காப்பாற்றுவதற்காகவே இந்தியப் படையினர் பலியாகினர் என்றும், மரியாதை செலுத்தவேண்டிய பொறுப்பு இலங்கை அரசுக்கு இருக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஸ்ரீமாவின் கட்டுப்பாட்டில் கட்சி தொடர்ந்து இயங்கும்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து முற்று விலகும் எண்ணம் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு இல்லையென்று தெரிவிக்கப்படுகிறது. கட்சியின் தலைவர் பதவியி

(4ம் பக்கம் பார்க்க)

## மண்ணித்தலைப் பகுதியில் வயோதிபர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

பூநகரிப் பகுதியில் நிலை கொண்டிருக்கும் படையினரால் மண்ணித்தலை என்ற இடத்தில் பொதுமக்கள் சிலர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கைதுசெய்யப்பட்டவர்களில் பலர் வயோதிபர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (56)

## ஓரிருநாட்களில் வவுனியாவில் பாரிய இராணுவ நடவடிக்கை

(கொழும்பு)

ஓரிரு நாட்களில் இராணுவத்தினர் வவுனியாவில் பாரிய இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளப்போவதாகக் கொழும்பில் சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை விஸ் தரிப்பதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

(4ம் பக்கம் பார்க்க)

## சிறு விஜயம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித்

(4ம் பக்கம் பார்க்க)

## இரு அமைச்சர்கள் வவுனியா விஜயம்

(வவுனியா)

அமைச்சர்கள் இருவர் இன்று வவுனியாவுக்கு விஜயம் மேற்கொள்கின்றனர்.

அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும், அமைச்சர் தயா ரத்னாயக்கவும் இன்று வவுனியா

(4ம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீ. ல. சு. கட்சி உபதலைவராக சூரியப்பெரும

(கொழும்பு)

முன்னாள் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பொதுச்செயலாளர் ஜே. ஆர். பி. சூரியப்பெரும ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உபதலைவர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## அகதிகளை ஏற்க இலங்கை தாமதம்

(கொழும்பு)

இந்தியாவில் உள்ள இலங்கை தமிழ் அகதிகளை விரைவில் இலங்கைக்கு அனுப்ப இந்தியா முயற்சித்தபோதும், இலங்கை அரசு தாமதப் படுத்தி வருவதாக தெரிவிக்

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### இன்று சனி மாற்றம்

எல்லா ராசிகளின் பலன்கள் ரூ 7/- எங்கும் கிடைக்கும். வாக்கியப்படி கணிக்கப்பட்டது. சோதிடர். யாழ்ப்பாணம். (சி-5537)

### தவறிவிட்டது

சினித்தம்பி சிவபாதம் என்னுடைய மூக்குக் கண்ணாடி, அடையாள அட்டை விண்ணப்ப அடிப்பத்திரத்துடன் 14-10-91 அன்று யாழ். கல்வித் திணைக்களத்தில் இருந்து பருத்தித்துறை வீதி, ஆரியகுளம் சந்தி வரையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 84, பிரவுலி வீதி- யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (சி-5539)

தம்புமுதலியார் நாகலிங்கம், சுருகாதபுரம், இராமநாதபுரம் என்ற முகவரியுடைய இலங்கை இந்திய இரு பாஸ்போட்டுகள் விசா அட்டையுடன் கடந்த 19-ம் திகதி வவுனியா ரயில் நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ் சந்தையடி, மண்டைதீவு என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (சி-5536)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## நாற்றுக்கள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

தென்பகுதியில் இருந்து விதைகள் இங்கு வருவது தடைப்பட்டு உள்ளதால் இங்கு தேவையான தரமான விதைகளை தமிழீழ ஆய்வு நிறுவனம் உற்பத்தி செய்து விற்பனை செய்கின்றது.

தற்போது நடுவதற்கேற்ற தென்னம் நாற்றுக்கள், வெண்டி (எம். ஐ. டி. எம். எம். ஆர் 7, வீ. ரீ இனங்கள்) போஞ்சி ஆகிய விதைகள் விற்பனைக்குள்ளன.

இவற்றை பெற விரும்புவோர் தமிழீழ ஆய்வு நிறுவனமைப் பணியகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## பாவனையாளர் பாதுகாப்புக்குழு

(உடுவில்)

அத்தியாவசிப்பொருட்களுக்கு ஏற்படும் திடீர் விலையுயர்வு, பொருட்களைப் பதுக்கல், பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தினரின் சீரான பொருள் விநியோகத்தைக் கண்காணித்தல், பல இடங்களில் நிவாரணம் பெறுதலை தடுத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வென பாவனையாளர் பாதுகாப்புக்குழுவொன்று வலிகாமம் தெற்கு உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உதவி அரசாங்க அதிபர் செல்வி கி. தணிகாசலம் தலைமையில் உடுவில் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்ற கூட்டத்தில் 7 பேர் கொண்ட பாதுகாப்புக் குழு அமைக்கப்பட்டது.

# "வியாபாரிகள் நட்டமடையாது பொருள்களுக்கு விலை நிர்ணயம்"

(உடுவில்)

"வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள மக்கள் நெருக்கடியான இக்காலகட்டத்தில் பொருட்களைச் சீராகப் பெற்றுக்கொள்ள வழி செய்யவே சில அத்தியாவசியப் பொருட்களைத் தனியார் விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. செயற்கைத் தட்டுப்பாடு ஏற்பட வர்த்தகர்கள் துணைபோகாமல் எம்முடன் ஒத்துழைக்க வேண்டும்."

அத்தியாவசியப் பொருட்கள் விற்பனை சம்பந்தமாக சுன்னாகம் நாகம்ஸ் தியேட்டரில் நடைபெற்ற விளக்கக் கூட்டத்தில் உரையாற்றிய திரு அரசன்னா இவ்வாறு கூறினார்.

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த சகல வர்த்தகர் பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

திரு அரசன்னா மேலும் பேசுகையில் கூறியதாவது:- ஏழு மாதங்களுக்குப் போதுமான உணவுப் பொருட்கள் யாழ். குடாநாட்டில் இருப்பதாகத் தரவுகள் மூலம் அறியப்பட்டபோதிலும் நெருக்கடி நிலைமைச் சாதகமாக்கிப் பொருட்களுக்குச் செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தாமல் இருக்கவே நாம் இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளோம்.

எமது இந்நடவடிக்கையை விட்டு வர்த்தகர்கள் பீதி கொள்ளத் தேவையில்லை. தற்போதுள்ள கையிருப்புத் தொகைகளைத் தொகுத்துக் கணக்கிட்டு அவற்றை எவ்வாறு மக்களுக்குப் பங்கிடு செய்வது என அறிவிக்கப்படும்.

வியாபாரிகள் நட்டமடையாதவகையில் பொருட்களுக்கான விலை நிர்ணயம் செய்து அறிவிக்கப்படும். அந்த விலையில் வர்த்தகர்கள் பொருட்களை விற்கவேண்டும். அல்லது எம்மிடம் ஒப்படைக்கவேண்டும்.

இதற்காக வர்த்தகர்கள் தமது பெயர், விலாசம், பொருட்களின் கையிருப்பு விபரம், அளவு; அவை பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள இடம், ஆகிய விபரங்களைக் குறித்து உடனடியாக உதவி அரசாங்க அதிபரிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். (109)

## இடம்பெயர்ந்த மக்களின் சுயதொழில் முயற்சிக்கு கடன் வழங்க ஏற்பாடு

(உடுவில்)

ஸ்ரீலங்கா இராணுவ நடவடிக்கைகளினால் தங்களின் சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்து வாழும் மக்கள் தாம் வாழும் இடத்திலேயே சுயதொழில் முயற்சியில் ஈடுபட விரும்பினால் அவர்களுக்குக் குறுகிய கால கடன் அடிப்படையில் பணம் உதவியாக வழங்க புனர்வாழ்வுக் கழகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இவ்வுதவி வழங்கும் திட்டமானது இடம்பெயர்ந்து அகதிகள் முகாம்களில் தங்கி வேலைவாய்ப்பின்றி இருக்கும் மக்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படவுள்ளன.

ரூபா இரண்டாயிரத்து ஐந்நூறு முதல் ஐயாயிரம் ரூபா வரை இவர்களுக்குக் கடன் உதவி தரப்படும்.

இக்கடனைத் தவணை அடிப்படையில் பின்னர் செலுத்தி முடிக்கலாம். [109]

## அத்தியாவசியப் பொருள்கள் தனியார் கடையில் இல்லை

(யாழ்ப்பாணம்)

அத்தியாவசியப் பொருட்களான அரிசி, மா, சீனி, தேங்காய் எண்ணெய், தேயிலை, பருப்பு வகைகளை தனியார் ஸ்தாபனங்கள் விற்கக்கூடாது என்று அறிவித்த பின்பு தனியார் கடைகளில் அப்பொருள்கள் விற்பனைக்கு இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த அத்தியாவசியப் பொருட்கள் ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு கொண்டு செல்வதை தடுக்கும் நோக்குடன் தமிழீழ காவல்துறையைச் சேர்ந்த பெண் காவலர்கள் சந்திகள் தோறும் நிறுத்தப்பட்டு வாகனங்களையும் சைக்கிள்களையும் பொதிகளையும் பரிசோதித்தவண்ணம் நிற்கின்றனர்.

யாழ்நகர்ப் பகுதியில் ஆரியகுளம் சந்தி, முற்றவெளி சந்தை, வின்சர் சந்தி, வெலிங்டன் சந்தி, சத்திரத்துச் சந்தி போன்ற பிரதான சந்திகளில் தமிழீழ காவல்துறையினர் வாகனங்களை பரிசோதித்துக் கொண்டிருக்கின்றனர். (152)

## இன்று கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுக் கல்விக் கோட்டத்தின் தெல்லிப்பழை, அம்பனை, அளவெட்டி, மல்லாகம், காங்கேசன்துறைக் கொத்தணிப் பாடசாலைகளின் அதிபர்களையும், ஆசிரியர்களையும், இன்று பி.ப. 1 மணிக்கு மகாஜனக்கல்லூரி மண்டபத்தில் நடக்கவிருக்கின்ற கருத்தரங்கில் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் பிரதிக் கல்விப்பணிப்பாளர் வேண்டியுள்ளார்.

விடுதலை உணர்வினால்

## எதிரிக்கு முன்னால் நாம் தலைநிமிர்ந்து நிற்கிறோம்

(கொழும்புத்துறை)

"நம் தமிழீழமண் விரைவில் விடுதலையடைய வேண்டும் என்ற உணர்வு சகல மக்கள் மத்தியிலும் இருப்பதால் தான் நாங்கள் எதிரிக்கு முன்னால் தலை நிமிர்ந்து நிற்கின்றோம். நம் தமிழீழ மண் வாழ்வுபெற வேண்டும் என்ற நம்பிக்கை சுதந்திரமான தமிழீழம் விரைவில் மலர வேண்டும் என்ற நம்பிக்கை எல்லோரதும் மனதிலே இருப்பதை தான் காண்கின்றோம்."

இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மணியம் தோட்டம் பகுதிப் பிரதேசப் பொறுப்பாளர் திரு. கண்ணன் அண்மையில் மணியம் தோட்டம் கலைமகள் சனசமூக நிலையத்தின் விசேட பொதுக்கூட்டத்தில் பிரதம விருந்தினராகப் பங்குபற்றி உரை நிகழ்த்தும் போது தெரிவித்தார்.

மேலும் அவர் உரையாற்றுகையில்; உமது மக்களுக்காக எதையும் செய்யத் துணியும் நம் தமிழீழ விடுதலைப் புலிகளின் பலத்தை அனைத்துப் பொதுமக்களும் தலை நிமிர்ந்து நின்றுமன உறுதியுடன் வலுப்படுத்தினால் தமிழீழம் மலர விடிவு வெகு தூரமில்லை என்று அவர் கூறினார்.

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தின் நிர்வாகச் செயலாளரும், இச்சனசமூக நிலையத்தின் போஷகருமாகிய திரு இ. சி. வரதராசா உரையாற்றுகையில் "சனசமூக நிலையங்கள் மக்களுடைய கலை, கலாசாரத்தைப் பிரதிபலிக்கக் கூடியதாகவும், சமூக முன்னேற்றத்தைப் பிரதிபலிப்பதாகவும் விளங்கவேண்டும். அத்துடன் வாசகர்களின் வாசிக்கும் பழக்கங்களை மேலும் தூண்ட நடவடிக்கைகளை எடுக்க முன்வரவேண்டும்" என்று குறிப்பிட்டார். [154

உ

அம்பிகை துணை

அளவெட்டி வடக்கு

தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோவில்

## பரிபாலன சபை

(26-5-91) ஆண்டுப் பொதுச் சபைக் கூட்டத்தின் தொடர்

இடம்: மேற்படி ஆலய மண்டபம்

காலம்: (10-11-91) ஞாயிறு காலை 9-00 மணி.

உறுப்புரிமை: I. பொதுச் சபையின் பழைய உறுப்பினர்கள்.

II. புதிய திருப்பணி நிதிக்கு ரூபா 1000/- அல்லது அதற்குமேல் அன்பளிப்புச் செய்தவர்கள்

மேற்படி உறுப்புரிமைப்படித் தகுதியுள்ள அங்கத்தவர்கள் சமுகந்தரவும்.

இங்ஙனம்

கோ. இரத்தினம்

கௌரவ செயலாளர்

தவளக்கிரி

25-10-91

(சி-5582)

## யாழ். ஆஸ்பத்திரியில் வெளிநோயாளர் தொகை தினமும் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் தற்போது வெளிநோயாளர்கள் பெருமளவில் அதிகரித்துள்ளனர்.

தெல்லிப்பழை ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பிரிவு மூடப்பட்டதைத் தொடர்ந்தும் தீவகப்பகுதிகளிலிருந்து பெருமளவு மக்கள் யாழ்ப்பாணப் பகுதியில் வந்து சேர்ந்ததையடுத்துமே வெளிநோயாளர் பிரிவில் தினமும் பெருந்தொகையானோர் சிகிச்சைக்கு யாழ். ஆஸ்பத்திரிக்கு வருகின்றனர்.

குழந்தைகள் சிகிச்சைப் பகுதியில் தடுப்பூசி போடும் குழந்தைகளும் தினமும் அதிகரித்துள்ளது. (56)

## இலவச நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது

(ஊர்காவற்றுறை)

தீவகத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்து யாழ்நகரில் தங்கியிருக்கும் ஊர்காவற்றுறை மக்களுக்கு நான்கு வார உலர் உணவு நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.

நிவாரணப் பொருட்களை இம்மாத முடிவுக்குள் பெற்றுக்கொள்ளுமாறும் தவறின் மீண்டும் பொருட்கள் வழங்கப்படமாட்டாதெனவும் ஊர்காவற்றுறை பல நோக்குக் கூட்டுறவுச்சங்க நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை வேலணையிலிருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கு இரு வாரங்களுக்கு மாத்திரமே நிவாரணம் வழங்குமாறு புனர்வாழ்வு அமைச்சு அறிவித்துள்ளது. 159

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ்ப்பாணக் கிளை

## திட்ட அமுலாக்கும் மேற்பார்வையாளர்

சென்ற 21ம், 22ம் திகதி பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட மேற்படி எமது விளம்பரம் தொடர்பாக-

விவசாயம், நெசவுவேலை, மீன்பிடி, தோல்பொருள் உற்பத்தி, தொழிற் கல்வி, வலதுகுறைந்தோருக்கான சுயதொழில் போன்றவற்றில் போதிய தேர்ச்சி, அனுபவம், ஆற்றல், வெளிக்கள வேலைகளில் ஈடுபாடு, வலதுகுறைந்தோருக்காக சேவைசெய்யும் தன்மை கொண்டோர் மாத்திரம் விண்ணப்பிக்கவும்.

இதுவரை விண்ணப்பம் அனுப்பியோருக்கும், மேலும் விண்ணப்பம் அனுப்பவுள்ளோருக்குமான நேர்முகப் பரீட்சை எமது பணிமனையில் 04-11-91 முற்பகல் 9-00 மணிக்கு நடைபெறும். தனித்தனி கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

ச. சிவானந்தராசா

கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி,

யாழ்ப்பாணம்.

26-10-91

(எ 1673)

# வடக்கு-கிழக்கை நிரந்தரமாக இணைக்க

# சர்வஜன வாக்கெடுப்பு தேவையில்லை

## அமைச்சர் தொண்டமான் கூறுகிறார்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளை சம்பந்தப்பட்டவர்களுடனேயே நடாத்தவேண்டும். இதைவிடுத்து புத்தர் சிலையை அகற்றினால்தான் பேச்சுவார்த்தைக்கு வருவோம் என்று கூறுபவர்களுடன் பேசுவது ஒரு வேடிக்கைத்தாகும்"

இவ்வாறு அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் அண்மையில் கொழும்பு மாளிகாவத்தையில் நடைபெற்ற பிரமாண்டமான கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

அக்கூட்டத்தில் அமைச்சர் மேலும் பேசுகையில்:

### சிங்களவர் உணரவில்லை

"கடந்த எட்டு வருடங்களாக சிறுபான்மை மக்களின் அபிலாசைகளை பெரும்பான்மை சிங்களமக்கள் உணர முடியாதவர்களாகவே இருந்து வருகின்றார்கள். சிறுபான்மை மக்களின் கோரிக்கைகளும், குறைபாடுகளும் உணரப்பட வேண்டும்.

வடக்கு-கிழக்கு இணைப்பு குறித்த விவகாரத்தில் அரசாங்கம் சர்வஜன வாக்கெடுப்பை தள்ளிப்போட்டுக் கொண்டே போகின்றது. சர்வஜன வாக்கெடுப்பு சாத்தியமில்லை என்று கூறுகின்றது. இதனை முடிவுசெய்யவேண்டியவர்கள் சிறுபான்மை மக்களே அன்றி அரசாங்கம் அல்ல.

### தரப்படுத்தல் கல்வி முறை

1971 இல் அமுல்செய்யப்பட்ட 'தரப்படுத்தல் கல்வி முறை' கல்வித்துறையில் சகல வாய்ப்புக்களையும் தமிழ் இளைஞர்களுக்கு மறுக்கலாயிற்று; தமிழ் இனத்தின் எதிர்காலம் இந்த தரப்படுத்தல் முறையினால் மண்ணடிக்கப்பட்டது.

1972 இல் கொண்டுவரப்பட்ட புதிய அரசமைப்புச் சட்டம் சிறுபான்மை மக்களை முற்றாக அன்னியப்படுத்தியது.

1977 இல் இடம்பெற்ற இன ஒழிப்பு நடவடிக்கைகள் சிங்களமக்களுக்கும் தமிழ் மக்களுக்குமிடையே நல்லுறவை முற்றாக அழித்தொழித்தன.

1978 இல் நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பு சிறுபான்மை மக்களைப் பெரும்பான்மை மக்களுடன் சரிசமமாக வாழக்கூடிய ஒரு நிலையை முற்றாக நீக்கியது.

### இனரீதியாக தாக்குதல்

1981 இல் மலைநாட்டுத் தமிழ்மக்கள் இனரீதியாக தாக்கப்பட்டு பெருமளவில் அழிவுக்குள்ளானார்கள்.

1983 இல் நாடளாவிய ரீதியில் வெடித்த இனக்கலவரம் இந்நாட்டில் இன ஒற்றுமை என்பது இனி ஏற்படுவதற்கில்லை என்ற ஒரு நிலையை உருவாக்கியது; அப்போது இருந்து எட்டுவருடங்களாக வடக்கிலும் கிழக்கிலும் யுத்தம் தொடர்கிறது.

வடக்கு-கிழக்கு பிரச்சினையை ஒத்திப்போடவும் முடியாது; தட்டிக்கழிக்கவும் முடியாது. இனிப்பான பேச்சுக்கள் மூலமும், உபயோகமற்ற வாக்குறுதிகள் மூலமும் இந்தப் பிரச்சினையைத்தீர்த்துவிட முடியாது. கூட்டங்களும் தொடர் மாநாடுகளும் நடத்துவதன் மூலமும் தீர்க்கமுடியாது. சாத்தியமானதும் திடமானதுமான அரசியல்தீர்வு ஒன்றின் மூலமே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

### தமிழருக்கு உரிமையுண்டு

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் இணைப்பு இன்றியமையாததொன்று என்பது ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். அரசு நிலங்களை நிர்வகிப்பதில் வடக்கு-கிழக்கு மக்களுக்கு உரிமையுண்டு என்பதும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். வடக்கு-கிழக்கு மக்களின் பாதுகாப்பும் அவர்களால் அவர்களுடைய மாகாணசபைகளால் கண்காணிக்கப்பட வேண்டும்.

1988 ஆம் ஆண்டிலிருந்து எட்டுவருடங்களாக நடைபெற்றுவரும் வடக்கு-கிழக்கு போராட்டத்தின் பின்னணியில்தான் இவை தீர்மானிக்கப்பட வேண்டும்.

### தனிநாடாக அமையவேண்டும்

சிறுபான்மை மக்கள் தங்களது சொந்தப்பிரதேசமென்று கூறத்தக்கதாக வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தனிநாடாக அமையவேண்டும் என்பதே போராட்டத்தை நடத்துபவர்களின் இலட்சியமாகும். ஒரு தனி அரசுக்கு உள்ள சகல அதிகாரங்களும் வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு ஓர் அரசியல் ஒப்பந்தத்தின் மூலம் வழங்கப்படுவதோடு உத்தரவாதமுள்ள ஓர் எதிர்காலத்துக்கும் உறுதியளித்து அவர்களுடைய நிலப்பிரதேசம் தலையீடு எதுவுமின்றிப் பாதுகாக்கப்படுவதற்கான உதவியும் அளிக்கப்பட வேண்டுமென்பதே அவர்களுடைய கோரிக்கையாக உள்ளது. (வி)

# சர்வகட்சி மாநாட்டில் சம்பந்தப்பட்டவர்களுக்கு அழைப்பு

(கொழும்பு)

சர்வகட்சி மாநாடுமூலம் நாட்டுப்பிரச்சினைக்கு நல்லதொரு தீர்வைக் காணும் நோக்கில் மாநாட்டிற்கு சம்பந்தப்பட்டவர்களை அழைப்பதென முடிவுசெய்யப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற பூர்வாங்க கூட்டத்தில் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டது. அடுத்துவரும் மாநாடுகளுக்கு ஒவ்வொரு கட்சியிலிருந்தும் 3 பிரதிநிதிகளையும், 2 அவதானிகளையும் அழைப்பதெனவும் முடிவுசெய்யப்பட்டுள்ளதாம்.

மேலும் சர்வகட்சி மாநாட்டின் முன்னேற்றம் குறித்து ஆராய நவம்பர் மாதம் 19ம் திகதி மாநாடொன்று கூட்டப்படவுள்ளது. (சி)

## நவம்பர் 4 முதல் 30 வரை

# யாழ். குடாநாட்டில் மரக்கன்று நாட்ட தமிழீழ ஆய்வு நிறுவனம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இவ்வருட மழைக்காலத்தில் குடாநாடு முழுவதும் பெருந்தொகையான மரக்கன்றுகளை நடுவதற்குரிய நடவடிக்கைகளில் தமிழீழ ஆய்வு நிறுவனம் ஈடுபட்டு வருகின்றது. இவ்வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மில்க்வைற் தொழிலகம், அன்னை தொழிலகம், போன்ற பல நிறுவனங்களின் பங்களிப்பைப் பெற்றுள்ளது. அத்துடன் உதவிக் கல்விப்பணிப்பாளரின் வழி நடத்தலின்கீழ் குடாநாட்டில் சுமார் 60 பாடசாலைகளின் மாணவர்களதும், ஆசிரியர்களதும் ஒத்துழைப்பையும் பெற்றுள்ளது.

இப்பாடசாலைகளில் பெருந்தொகையான மரக்கன்றுகளை உற்பத்தி செய்வதற்கான வேலைத்திட்டத்திலும் இந்நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படும் மரக்கன்றுகளை பாடசாலை மாணவர்களின் ஊடாக பாடசாலை சூழலிலும் பொது இடங்களிலும் நட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் 4-ந் திகதி முதல் 30-ந் திகதி வரையிலான காலப்பகுதியை மரம் நடுகைக் காலமாக செயற்படுத்துவதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழீழ ஆய்வு நிறுவனம் மரம் நடுகைக்காக புளி, இப்பில்-இப்பில், திருக்கொன்றல், இலவம், மாமுந்திரிகை, அகத்தி, பலா ஆகிய பயன்தரு மரக்கன்றுகளை நடுவதற்கான ஏற்பாடுகள் செய்து வருகின்றது.

இம்மர நடுகைக்காலத்தில் மரக்கன்றுகளை உற்பத்தி செய்து தருவதற்கும், நட்டுப் பராமரிப்பதற்கும் ஆர்வம் உடையவர்கள் இணைந்து செயற்பட வருமாறு தமிழீழ ஆய்வு நிறுவனம் அழைப்பு விடுத்துள்ளது.

# பஞ்சாப்பில் 7 பேர் சுட்டுக்கொலை

(புதுடில்லி)

பஞ்சாப் மாநிலத்தின் லுதியாகு கிராமத்தில் சுகாதார சேவையைச் சேர்ந்த வைத்தியர்கள் உட்பட 7 பேர் பயங்கரவாதிகளாக் சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

வாகனமொன்றில் இவர்கள் வந்தபோதே தீவிரவாதிகள் வழிமறித்து இவர்களைச் சுட்டுக்கொன்றனர்.

பின் இந்த வாகனத்திலேயே தீவிரவாளிகள் தப்பிச் சென்றுவிட்டனராம். (மா)

இராசி பலன்

28-10-1991

திங்கட்கிழமை

(தமிழுக்கு ஐப்பசி 11)

பஞ்சமி மு. ப 9-05வரை. திருவாதிரை பி. இ. 1-31 வரை, சித்தாமிர்தம். இராகு காலம் காலை 7-33 முதல் 9-03 வரை. சுபநேரம் பகல் 12-03 முதல் 1-33 வரை.

மேடம்: மனித நேயம், தொழில் உறவு, மகிழ்ச்சி.

இடபம்; குடும்ப விசேசம், மனவேதனை, மணமுடை.

மிதுனம்: சுபகாரியம், காரியச் சித்தி அதிகாரம்.

கடகம்; வெறுப்பு, வீண் விரயம், பொறுமை.

சிம்மம்: தைரியம், வெற்றி வாய்ப்பு, இனசன வரவு.

கன்னி: தான தர்மம், வெகுஜன மதிப்பு, பாராட்டு.

துலாம்: மன உழைச்சல், காரியத்தடை அலைச்சல்.

விருச்சிகம்: தீ யோர் தொல்லை, வெறுப்பு, குடும்பப் பிரிவு.

தனுசு: தொழில் சிறப்பு, காரியச்சித்தி, பயணம்.

மகரம்: தப்பபிப்பிராயம், நீசர் நட்பு, குழப்பம்.

கும்பம்; விருந்துபசாரம், சகோதரர் உதவி, புகழ்.

மீனம்: தொழில் நஷ்டம், கீழான நிலை, கோபம்.

ஜோஸ்யர்

# சிறு கடல் தொழில் மீண்டும் ஆரம்பம்

(வல்வெட்டித்துறை)

யாழ். மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கை ஓய்ந்ததைத் தொடர்ந்து காஷையூர், கொழும்புத்துறை, குருநகர்ப் பகுதி மீனவர்கள் கரையோரப்பகுதி சிறுகடல்களில் மீன்பிடித்துவருகின்றனர்.

ஆனைக்கோட்டை, சாவகச்சேரி சிறகுவலை மீனவர்களும் இறால் பிடிப்போரும் தமது வலைகளுடன்செல்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இதேவேளை சகல பகுதிகளிலும் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலுக்கு எவரும் செல்வதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (59)

# அம்பாறைப் பகுதியில் உக்கிர மோதல்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை விஷேட அதிரடிப்படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல் இடம்பெற்றுள்ளது.

சாகமம் என்ற கிராமப் பகுதியில் உணவுப் பொருட்களுடன் சென்ற புலிகள்மீது தாக்குதல் மேற்கொண்டதாகவும், இதையடுத்து இரு தரப்பினரிடையேயும் கடும் மோதல் சில மணிநேரம் நடைபெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சேதவிபரங்கள்பற்றி எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (ஜ)

# பருத்தித்துறையில் தும்புதொழிற்சாலை

(பருத்தித்துறை)

வடமராட்சி தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தென்னந்தும்பிலிருந்து கயிறு தயாரிக்கும் தும்புத்தொழிற்சாலை ஒன்றை பருத்தித்துறையில் ஆரம்பித்துள்ளது.

உள்ளூர் மூலவளங்களைப் பயன்படுத்தி தொழில் வாய்ப்புக்களையும் உற்பத்திப் பொருட்களையும் ஆக்கும் திட்டத்திற்கமையவே இத்தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தென்னந் தும்பிலிருந்து கயிறு தயாரிக்கும் இத்தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டதனால் நேரடியாக 15 குடும்பங்களும் மறைமுகமாக 80 குடும்பங்களும் வேலைவாய்ப்பையும் வருமானத்தையும் பெற்றுள்ளதாக தமிழர் புனர்வாழ்வுக்கழக வடமராட்சி இணைப்பாளர் திரு. இரா. சிவச்செல்வம் தெரிவித்தார். (52)

## அகதிகள் அதிகரிப்பால்

# முகாம்களில் சுகாதாரம் பேணுவதில் கஷ்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள அகதிமுகாம்களில் அகதிகள் அதிகரிப்பதினால் சுகாதாரத்தை பேணுவதில் கஷ்டத்தை எதிர்நோக்குவதாக அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இந்த முகாம்களில் சுகாதார வசதிகளை யாழ். மாநகர சபை ஏற்கனவே ஒழுங்கு செய்துள்ளது. தண்ணீர் வசதிகள், குப்பைகள் மேடுதல், தற்காலிக மலசல கூடங்கள் போன்ற வசதிகள் செய்திருந்தும்கூட சுகாதாரத்தைப் பேணுவதில் சிரமமாகவுள்ளதென மேலும் அவர் தெரிவித்தார்.

முகாம்களில் தங்கியுள்ளவர்கள் தங்கள் சுகவாழ்க்கையில் சுத்தமாக இருந்தால் இந்தச் சுகாதார சீர்கேட்டை நிவர்த்திசெய்யலாம் என்றும் அவர் கூறினார். [152]

## போக்குவரத்துத் தடையினால் தபால்கள் தேக்கம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், பூநகரிப் பகுதிகளுக்கான தபால்கள் யாழ். பிரதம தபாலகத்தில் தேங்கிக்கிடக்கின்றன.

போக்குவரத்துத் தடை ஏற்பட்டுள்ளதனால் தபால்கள் பெருமளவில் தேங்கியுள்ளனவாக தெரிவிக்கப்படுகிறது. (56)

## புலிகளுடன் பேச்சு நடத்த அரசு தரப்பில் முயற்சி

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை ஒன்றை மேற்கொள்ளும் நோக்கில், அரசு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக விடுதலைப் புலிகளுக்குச் செய்தி ஒன்றை அனுப்ப உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் இயக்கம், அரசியல் தீர்வு முயற்சிக்கு முன்வரக்கூடியதாகவும், அவர்களுக்கு இறுதிச் சந்தர்ப்பம் ஒன்றை வழங்குமுகமாகவும் இம்முயற்சி மேற்கொள்ளப்படுவதாகவும் அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## மீளக்குடியமர்த்த நடவடிக்கை

(திருகோணமலை)

இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து அகதிகளாகிய குச்சவெளி மக்களை மீளக்குடியமர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

மீளக் குடியமர உள்ள மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குவதுடன், தற்காலிகக் கொட்டில்களை அமைப்பதற்குக் கிடுகுகளும் வழங்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## குழந்தைகளுக்கு பால்மா விநியோகிக்கப்பட்டது

(சித்தன்கேணி)

முகாம்களில் தங்கியிருக்கும் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இலவசமாக பால்மா விநியோகிக்கப்பட்டது.

காரைநகரிலிருந்து இடம்பெயர்ந்து வந்து தொல்புரம், சத்தியகாடு, சித்தன்கேணி ஆகிய இடங்களிலுள்ள ஐந்து முகாம்களில் தங்கியிருக்கும் குடும்பங்களின் ஒருவயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு லக்டோஜன் பால்மா இலவசமாக கிராமசேவை அலுவலர்களினால் வழங்கப்பட்டன.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு. கெ. யோசப்பின் முயற்சியினால் பால்மா வழங்கப்பட்டது குறிப்பிடத்தது. (187)

## இலங்கை இனப்பிரச்னையால் உலர்மீன் ஏற்றுமதி பாதிப்பு

(சென்னை)

இலங்கை இனப்பிரச்னை காரணமாக தூத்துக்குடி பகுதியில் உலர்மீன்களின் ஏற்றுமதி வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதாக கடல் உணவு ஏற்றுமதி வளர்ச்சிக்கழகத்தின் தலைவர் எம். சக்திவேல் நேற்று முன்தினம் தூத்துக்குடியில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது; 1986ம் ஆண்டு தூத்துக்குடி பகுதியில் உலர் மீன் ஏற்றுமதி 6138 தொன்னாக இருந்தது. இவ்வாண்டு 1413 தொன்னாகக் குறைந்துவிட்டதென்றார். (மா)

## நரசிம்மராவ் தொகுதிக்கு பார்வையாளர்கள்

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் திரு. பி. வி. நரசிம்மராவ் போட்டியிடும் ஆந்திரமாநிலத்திலுள்ள நந்தியால் லோக்சபா தொகுதிக்கு இரண்டு பார்வையாளர்களை தேர்தல் கமிஷன் அனுப்பவிருக்கிறது. (மா)

### அகதிகளை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வப்படுகிறது.

திருகோணமலைக்கு இரண்டாயிரம் அகதிகளை இந்தியா அனுப்ப முயற்சிக்க, இலங்கை அரசு முதலில் 500 பேரையும் பின்னர் கட்டம் கட்டமாக இவர்களை அனுப்புமாறும் இலங்கை அரசு கேட்டுள்ளது.

தமிழ் நாட்டிலுள்ள இரண்டு லட்சம் இலங்கைத் தமிழ் அகதிகளில், முதற்தொகுதியான இந்த 500 பேரும் விரைவில் இலங்கை வரவுள்ளனர். இவர்கள் அனைவரும் திருமலையைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

## பரீட்சை முடிவுகள்

(கொழும்பு)

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க. பொ. த உயர்தர பரீட்சை முடிவுகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 15-ம் திகதியளவில் வெளிவருமென பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல தெரிவித்தார்.

மேற்படி பரீட்சைக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் மாணவர்கள் தோற்றினார்கள். (153)

## 4,800 பேர் கொலை

(சண்டிகார்)

பஞ்சாப் மாநிலத்தில் இவ்வாண்டு வன்செயல் காரணமாக 4,800 பேர் கொலைப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரிவினைவாத சீக்கிய தீவிரவாதிகள் நடத்திவரும் போராட்டத்தினாலேயே பலர் கொலைப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

### இரு அமைச்சர்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வுக்கு வருகைதந்து, இரண்டு தினங்கள் தங்கவுள்ளனர்.

புனர் நிர்மாணப் பணிகளை மேற்கொள்வது தொடர்பாக மாநாடுகளைக் கூட்டி, பல விடயங்களை இவ்விரு தினங்களிலும் இவர்கள் ஆராய உள்ளனர்.

### ஓரிருநாட்களில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

இராணுவத்தினரின் அடுத்த தாக்குதல் வவுனியா மாவட்டத்திலேயே மேற்கொள்ளப்படும் என்றும் தாக்குதல் நடத்தப்படவுள்ள இடம் குறித்தோ நேரம் குறித்தோ எதுவிதத் தகவலும் கூறமுடியாது என வடபகுதி இராணுவத் தளபதி ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவும் கூறினார்.

### பேச்சுவார்த்தைக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளனர்.

யாழ். குடாநாட்டைச்சுற்றி படைகளை அரசு அனுப்பியிருப்பதும் இந்த நோக்கத்திற்காகவேயாகும்.

பேச்சுவார்த்தைக்கான ஆலோசனைகளை தொண்டமான் வழங்கியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

நாட்டில் இனப் பிரச்னையைத் தீர்ப்பதற்கான அனைத்துச் சக்திகளும் தம்மிடம் இருப்பதாக ஜனாதிபதி திரு. பிரேமதாசவும் தற்போது வெளிக்கொணர்ந்து வருவதும் இங்கு கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவேண்டிய ஒன்றாகும் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

### இலங்கை நிலைமை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிமிடங்கள் ஓடக்கூடிய இந்த படம் அண்மையில் லண்டனில் காண்பிக்கப்பட்டது. இந்த படத்தை இயக்கியவர்கள் நிமால் மெண்டிஸ், ரஞ்சினி மெண்டிஸ், ஆகிய இருவரும் சுமார் 3 வாரகாலம் நாட்டின் பலபகுதிகளுக்கும் விஜயம் செய்து பலதரப்பட்ட மக்களையும் சந்தித்து அவர்களின் மனப்பிரதி பலிப்புகளை இந்த படத்தின் மூலம் வெளிக்கொணர்ந்துள்ளனர். (158)

### லலித் குழுவினரின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வின் வட்டாரங்கள் கூறுகின்றன.

ஐ. தே. கட்சியிலிருந்து தங்களை நீக்கமுடியாதென உயர் நீதிமன்றத்தில் மனுச்செய்த வழக்குச் சாதகமாக வந்தாலும் சரி பாதகமாக வந்தாலும் சரி, இவர்கள் இந்த இரண்டு கட்சிகளில்தான் தங்களை இணைத்துக்கொள்ளமுடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (153)

### சர்வகட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கிறது.

எதிர்க்கட்சிகள் சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது தலைமையில் இயங்கும் பாராளுமன்ற கட்சித்தலைவர்கள் கூட்டங்களை பகிஷ்கரித்துவருவதன் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (153)

### வடபகுதியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினர் நூற்றுக்கணக்கில் குவிக்கப்பட்டு வருகிறார்களாம்.

ஹெலிகொப்டர் மற்றும் கடல் மார்க்கமாகப் படையினர் இப்பகுதியில் தரையிறக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

## பாக். கிரிக்கெட் அணியின் இந்திய விஜயம் ரத்து

(கராச்சி)

இந்தியாவில் சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளவிருந்த பாகிஸ்தான் கிரிக்கெட் அணி தனது விஜயத்தை ரத்துச் செய்துள்ளது.

பாகிஸ்தான் அணி இந்தியாவில் போட்டிகளில் பங்குபற்றும் பட்சத்தில் குண்டு வெடிப்புகளை தாங்கள் நடத்தப் போவதாக பல தொலைபேசி மிரட்டல்கள் வந்ததையடுத்தே தாங்கள் இந்தியாவிற்கான விஜயத்தை ரத்துச் செய்ததாக பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

ஐந்து ஒரு நாள் போட்டிகளை கொண்ட இத்தொடர் இன்று ஆரம்பமாகவிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (சி)

## 2,000 கடற்றொழிலாளர் தீவுப்பகுதியில் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக இரண்டாயிரம் கடற்றொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

தற்போது அகதிகளாக யாழ்ப்பாணம் வந்துள்ள இவர்கள் மீன்பிடி உபகரணங்களைவிட்டு வந்துள்ளதுடன் தமது தொழிலையும் இழந்துள்ளனர்.

இதேவேளை பாசையூர், குருநகர், கொழும்புத்துறை பகுதி கடற்பரப்பில் மீன்பிடித் தொழில் செய்வதற்கு அச்சம் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் 6 மீனவர் படையினரால் கடற்பரப்பில் வைத்து கைதுசெய்யப்பட்டதையடுத்தே மீனவர்கள் பீதிக்குள்ளாகியிருக்கின்றனர். (56)

## அடையாள அட்டை விண்ணப்ப படிவங்களுக்கு தட்டுப்பாடு

(சித்தன்கேணி)

யாழ். மாவட்டத்தில் அடையாள அட்டைகளை புதுப்பித்தலுக்கான விண்ணப்பப்படிவங்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது.

ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளரின் அறிவித்தலுக்கிணங்க 1972ம் 1973ம் ஆண்டுகளில் அடையாள அட்டைகளை பெற்றுக்கொண்டவர்களுக்கு புதிய அடையாள அட்டைகளை பெற்றுக்கொடுப்பதற்கான விண்ணப்பப்படிவங்கள் யாழ். மாவட்டத்தின் [illegible] கிராம சேவை அலுவலர்களிடம் இல்லை.

இதனால் இவர்களுக்கான அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை கிராம சேவை அலுவலர்கள் மேற்கொள்ளமுடியாமல் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (137)

## அவசர கூட்டம்

(யாழ்ப்பாணம்)

க. பொ. த (சாதாரணம்) முன்னோடிப்பரீட்சை நடத்துவது, இடம்பெயர்ந்த மாணவர்கள் கல்வி சம்பந்தமாகவும் அவசரக்கூட்டம் ஒன்று யாழ். கல்வித்திணைக்கள பணிமனையில் இன்று திங்கட்கிழமை மு. ப. 10 மணிக்கு நடக்கவிருப்பதால் சகல கல்விக் கோட்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர்களையும் வேலணை கல்வி கோட்ட கொத்தணி அதிபர்களையும் இடம் பெயர்ந்த மக்கள் இருக்கின்ற சகல பாடசாலை அதிபர்களையும் தவறாது வருகை தருமாறு வடபிராந்தியக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## அதிபர், ஆசிரியர் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடக் கல்விக் கோட்ட, உடுப்பிராய், வசாவிளான், கோப்பாய்க் கொத்தணியில் கடமை புரியும் அதிபர்களையும், ஆசிரியர்களையும் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1-00 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி மண்டபத்திற்கும், அச்சுவேலி, நீர்வேலி, புத்தூர்க் கொத்தணியில் கடமை புரியும் அதிபர்களையும், ஆசிரியர்களையும் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 1-00 மணிக்குப் புத்தூர் சோமாஸ்கந்தா பாடசாலை மண்டபத்திற்கும் தவறாது வருகை தரும்வண்ணம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## அதிருப்தியாளர் குழுவின் கூட்டம்

(கொழும்பு)

ஐ. தே. கட்சி அதிருப்தியாளர் குழுவினர் லலித் - காமினி ஆகியோர் நடாத்தும் பொதுக் கூட்டம் மொனறாகலையில் இந்த வாரம் நடைபெறவிருக்கிறது.

### ஸ்ரீமாவின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விருந்து இவர் விலகினாலும் தொடர்ந்தும் கட்சியின் தலைமைத்துவத்தை பொறுத்தவரையில் அவர் அதை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பார் என்றும் தெரியவருகிறது. (153)

### சீன விஜயம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மூன்று வாரகால வெளிநாட்டு விஜயமொன்றை மேற்கொண்டு சீனா செல்கிறார்.

இவர் நாட்டில் இல்லாதபோது கட்சித் தலைவர் பதவியை திரு. அனுரா பண்டாரநாயக்கா வகிப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது. (153)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஒக்டோபர் 28ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number D/180986/81